உ



# அமரர் பொன்னுத்துரை மனமோகன்

அவர்களின்

சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.



# அமரர் பொன்னுத்துரை மனமோகன்

**தோற்றம்**
**07-07-1957**

**மறைவு**
**20-01-2002**

## திதிவெண்பா

போற்றலுறு விஷுவருடம் புகழ்
ஏற்றமுறு ஷஷ்டித் திதிநாள்தனில்
அறமாற்று அன்பினனெம் அரிய மன
**மோகன்** இறவாத வாழ்வடைந்த நாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தோத்திரத்திரட்டு

## விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவார் கை.

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந் தாமாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற் கேதும் மகிழ வேண்டாம்
சிந்தையீர் உமக் கொன்று சொல்லக் கேண்மின்
திகழ் மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திரு நாமம் நமச்சிவாய
என்றெழுவாக் கிருவிசும்பில் இருக்கலாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
    பற்று நான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
    திருப் பெருந் துறை யுறை சிவனே
யாரோடு நோகேன் ஆர்க் கெடுத்துரைப்பேன்
    ஆண்ட நீ அருளிலை யானால்
வார் கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
    வருக என்றருள் புரிவாயே

## திருவிசைப்பா

இடர் கெடுத் தென்னை யாண்டு கொண்டென்னுள்
    இருட் பிழம் பற வெறிந் தெழுந்த
சுடர் மணி விளக்கி னுள் ளொளி விளங்குந்
    தூயநற் சோதியுட் சோதி
அடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா
    அயனோடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
    தொண்டனேன் பணியுமா பணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளர வீசிய சண்டிக்கு
மண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனக மும் மருளிச்
சோதி மணிமுடித் தாமமு நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதத் துக்குப் பசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

## திருப்புகழ்

துள்ளு மத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் - தருவாயே
தெள்ளு தமிழ்ப் பாடற் தெளிவோனே
செய்ய குமரேசத் - திறலோனே
வள்ளல் தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் - பெருமாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கவசம்



வளர்சிகையைப் பராபரமாய்
வயங்கு விநாயகர் காக்க வாய்ந்த சென்னி
யளவு படா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறுநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க வுருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பால சந்திரனார் காக்க

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசை சுதர் காக்க நனி
வாக்கை விநா யகர்தாங் காக்க
வவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனி
காக்களங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
வேமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந்தன்னைத்
தோமலுங் கணநாதர் காக்கவகட்
டினைத் துலங்கே ரம்பர் காக்க.

ப்க்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டதைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்கஞய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்ல
லுக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முற்கையை வணங்கு வார்நோ
யாழ்தரச்செய் யாசாரபூ ரகர் காக்க
விரல் பதும வத்தர் காக்க
கேழ்கின்றா நகங்கள் விநா யகர்காக்க
கிழங்கினிற்புத் தீசர் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினியிற் சித்தீசர் காக்கவுமா
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர் ருமற் கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன் காக்க தகமு தீசி
தக்க நிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டு
மோகையின்விக் கினகிருது காக்க விராக்
கதாபூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாது
வேகமுறு பணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க.

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானியங் கிரக
மனைவி மைந்தர் பயிினட் பாதிக்
கதியாவுங் கலங்குசர்வா யுதர்காக்க
காமர் பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றிசீ விதங்கபீலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
வென்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா விடையூ றொன்று
மொன்றுறா முனிவர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதினாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகிமன்னும்.

* விநாயகர் கவசம் முற்றிற்று *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரியப்புலம்
ஸ்ரீ மகா மாரியம்மன்



# திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

காப்பு

சீராருஞ் செந்நெல்கன்னற், கழனி, யோடு
செய்யகமு, குயர்பனாச், சூத, மோங்க
நீராரு, முயர் வரிசைப், புலத்து, மேவும்
நிறைகருணை, மழைபொழியும், மகாமாரிப்
பேராருந், தேவிமிசை, யூஞ்சல், பாடப்
பிறையணியு, மரனருளா, லுமையா ளீன்ற
ஏராரு, மைங்கரன்ற, னுபய, பாத
மினியதுணை, செய்தென்றுங் காப்ப, தாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்

எண்ணரிய பரஞானம் பலகை யாக
இலங்கமுய ராகமங்கள் விட்ட மாகப்
பண்ணமர்நால், தேவமொளிர் கயிறு தாகப்
பகரரிய பலகைலைமேற் கட்டி யாக
விண்ணுலக மடநாதர் பரவி யேக
விளங்குநவ ரத்தினபீ டத்தின் மேவி
மண்ணவர்கள் துதிவரிசைப் புலத்து வாழும்
மாரியம்மைத், தேவியரே, யாடீர், ருஞ்சல்.

விஞ்சையர்கந், தருவர்பல, கீதம் பாட,
விரவுசரி கமபததிச், சுரங்கள் கூட
நஞ்சுபொதி கண்ணடன,மாத, ராட,
நவையிலன்பு நிறையடியார் கண்ணீ, ரோட
தஞ்சமென நான்மறைக ளடியைத், தேடத்
தாயெனநின் றாருயிரைக் காத்தல், நீட
மஞ்சுபடி மதில்வரிசைப், புலத்து, வாழும்
மாரியம்மைத் தேவியரே, யாடீ, ருஞ்சல்.

துன்னுபல, புறச்சமய, விருள்க, ளோட்டச்
சொல்லரிய, பகைவளர்தீ, வினைகள், வீட்டர்
கின்னரர்கிம், புருடரிசை, யாழிற், சுட்டக்
கேண்மையுறு, மடியருளத், தன்பு, நாட்டப்
பொன்னரிய பூமாதர் வடந்தொட், டாட்டப்
புலவர்பல பாமாலை புனைந்து சூட்ட
மன்னுவரி, சைப்புலமா, நகரில் வாழும்
மாரியம்மைத் தேவியரே, யாடீ, ருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடுறு மெய், யடியார்கரஞ், சிரமே, லோங்கப்
பெரியம்மை யாதிபல நோய்க, ணீங்க
ஏடுறுபொன் மலர்மாலை, யிமையோர், தாங்க
ஏந்திழையார் பாடுமிசை, யோசை, தூங்க
நீடுறுமென் டிசையுமருட், கீர்த்தி, வீங்க
நிலவுமொழி தனிக்கவிதை சசிதை வாங்க
மாடுறுசீர் பொலிவரிசைப் புலத்து வாழும்
மாரியம்மைத் தேவியரே யாடி ரூஞ்சல்.

இட்டமுறு, மடியார் தமிழ், வேத
இணையின்பல, வெண்சங்க, மினிதி ஊத
சிட்டர்பலர், தெரிசனைக்குச், சேர்ந்து, போத
சேயிழையார். கூட்டங்கள், சென்று, மோத
அட்டதிசை, யும் பரவு, மரும்பொற், பாதத்
தணிசிலம்பி, லோசைபுவி, யெங்கும், நீட
மட்டமாபுப், பொலிவரிசைம், புலத்து, வாழும்
மாரியம்மைத், தேவியரே, யாடீ, ரூஞ்சல்.

அண்டமுடி, யுறவளர்செங், குஞ்சி, யாட
அழகுநிறை, மாணிக்கக், குழைக, ளாட
மிண்டு மொழி, செறிநெற்றிச், சுட்டி, யாட
விழங்குநவ, மணியிழைத்த, பதக்க மாடச்
செண்டிலங்கு, செங்கைமிசை, வளைய, லாடத்
திருவடியி, லணிந்த மணிச், சதங்கை, யாட
மண்டுபுகழ். பொலிவரிசைப், புலத்து, வாழும்
மாரியம்மைத், தேவியரே, யாடீ, ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனா, தியர்பரவி, யிசைகள், கூற
இரவியிரு, கையிலுயர், குடைக, ளேறச்
சந்திரனா, தியர்நறிய, மலரைத், தூறத்
தகைபெறுவெண் கவரியர, மகளிர், மாறக்
கந்தருவ, மாதர்நடக், காஸ்க, ளாறக்
கண்டுமகிழ், வார் கொண்ட, கவலை, மாற
மந்திரங்கள், போலி வரிசைப், புலத்து, வாழும்
மாரியம்மைத், தேவியரே, யாடீ ரூஞ்சல்.

அருவினையை வாட்டவரு, மம்மை, பேதி
யாதி சின்ன, முத்துமுத லான, நோய்கள்
வருவதொரு, போதுமின்றி, யடியார், வாழ
வரமருளி, யரியமணிப், பீட, மேறித்
தருவனைவா, யகாவெவையா தந்து, காத்துத்
தாயினுமின், னருள்புரியுந், தலைவி, யாகி
மருவுசெல்வத், துயர்வரிசைப், புலத்து, வாழும்
மாரியம்மைத், தேவியரே, யாடீ ரூஞ்சல்.

அன்னமுதே யருளமுதே யாடீ ரூஞ்சல்
ஆனந்த வாரிதியே யாடீ ரூஞ்சல்
சொர்ன்னமரு ளரசியே யாடீ ரூஞ்சல்
முடியேந்து கையினரே யாடீ ரூஞ்சல்
எந்நிலமுந் துதிதாயே யாடீ ரூஞ்சல்
ஏழையெளோர் சேர்மணியே யாடீ ரூஞ்சல்
மன்னர்திரந் துதிவரிசைப் புலத்து முத்து
மாரியம்மைத், தேவியரே யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துங்கமுறு; முயர்சைவ; சமயம்; வாழி
துலங்குதிரு; நீறக்க; மணிமேல்; வாழி
தங்கியவே; தாகமங்கள்; தலையாய், வாழி
தாவில்மழை; பொழிந்துலகு, தழைத்து; வாழி
செங்கமல; மாதினருள்; செங்கோல்; வாழி
தினந்துதிசெய்; மெய்யடியர்; சிறந்து; வாழி
மங்கையர்கற்; புயர்வரிசைப், புலநல், வாழி
மாரியம்மைத்; தேவியரே; வாழி; வாழி

நான் முகன்தான்; சரஸ்வதியே; வாரும்; அம்மா
எந்தன் நாவினுங்ளே சீர்பொலியும் படித்துரைக்கு
கேளிஎனே வாசமுடன் சரக்குக் கட்டி
ஓடிவாரும் சந்நிதிக்கே ஏலிலைபோ; ஏலிலையோ.

அத்திய மண்டஎ சோழமது கடந்து அந்தந்தத்
தேசத்தால் அங்கத்து நடந்து மும்மாரிமழை
பொழியும் கனத்ததொரு நெல்விளையும் மற்று
முள்ள சீர்மை அவ்வூரிக்கப்பல் ஆனந்தமாகப்
பச்சவடஞ் சென்று வந்தபீமனுக்கே கொடுத்தே
அணிந்து கோலமுள்ள கப்பல் அது வழிகளது
தாண்டி சென்னை பட்டினம் துறை வந்து
சேர்ந்ததையா

ஏலிலையோ ஏலையேலோ
தத்தைதாம் ஏலிலேலோ
தாதிந்தா ஏலியலோ
ஏலிலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னுத்துரை மனமோகன்

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

அந்தச் செய்தி அறிந்து வரியப்புலமே திகைத்துவிட்டது. தேர்த்திருப்பணியில் மும்முரமாக ஈடுபட்டுழைத்த மனமோகனுக்கா இந்த நிலை. அவர் கொழும்புக்கு சுகமாகத்தானே இந்தியாவிலிருந்து வந்து சேர்ந்தார் என்று ஒவ்வொரு மக்களும் அங்கலாய்த்தனர். இறைவனுக்கு கண்ணில்லையோ என்றுகூட சிலர் சொன்னார்கள்.

வினை தீர்க்கும் வீரகத்திப்பிள்ளையாரும் சோலையினில் வரும் மாவிட்டபுரத்தானும் காக்கின்ற கொல்லங்கலட்டியிலுள்ள கயந்தப்பை என்னும் குறிச்சியில் பொன்னுத்துரைக்கும் சரஸ்வதிக்கும் மூத்த மகனாக 07.07.1957இல் பிறந்தவர்தான் மனமோகன். சைவ அனுட்டானமும் அமைதியும் நிறைந்த குடும்பத்தில் அமரர் மனமோகனுடன் மல்லிகாதேவி என்ற சகோதரியும் மனோகரன், மகாதேவன், மகேந்திரன் ஆகிய சகோதரர்களும் பிறந்தார்கள். சகோதரபாசமும் தாய்தந்தையர் மேல் பக்தியும் கொண்டவராக இவர் சிறுவயது தொடக்கம் வளர்ந்து வரலாயினர்.

தாய் தந்தையரின் விருப்பப்படி கொல்லங்கலட்டி சைவ வித்தியாலத்தில் ஆரம்ப கல்வியைத் தொடங்கினார். சாந்தமே உருவான மனமோகன் அவர்கள் உயர்கல்வியை தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் வேளையில் கல்லூரியின் புறக்கிருத்தியங்களிலும் பங்குபற்றிப் பாடசாலைக்கு நற்பெயரைப் பெற்றுக்கொடுத்ததாக அதிபர், ஆசிரியர்களால் மதிக்கப்பட்டார். உயர்கல்வியை மேலும் தொடராது லங்கா சீமெந்து நிறுவனத்தில் பொதி அடைக்கும் பகுதியில் பனல் போட் ஒப்பரேற்றராக பணிபுரிந்தார்.

மணப்பருவம் அடைந்த மனமோகன் அவர்களுக்கு 1990ஆம் ஆண்டு வரிசப்புலம் நடராசா சின்னம்மா தம்பதிகளின் மகளான கலாநிதியை மணம் முடித்து வைத்தனர்.

திரு.பொ.மனமோகன் கலாநிதி தம்பதிகளின் வாழ்க்கை சீரும் சிறப்புமாக அமையப்பெற்று இருக்கும் சாலையில் வரிசப்புலம் மகாமாரி அம்மன் அருளால் சரண்யா என்னும் மகளைப் பெற்றெடுத்தனர். ஒரு வயது நிறைவில் அம்பாள் அடிசேர்ந்து விட்டார். அதன் பின் அபிவர்ஷைனி, பிரியங்கன், சுகாங்கன் ஆகிய பிள்ளைகளைப்பெற்றெடுத்தனர்.

பிள்ளைகளின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிகவும் கருசனையுடன் மனமோகன் வாழ்ந்து கொண்டிருந்தார்.

**பொதுப்பணிகள்**

எதற்கும் இலேசாகச் சிரித்துக்கொள்ளும் இவர் அமைதியான வழியில் சமூகத்தொண்டு செய்து வந்திருக்கிறார். சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையின் வளர்ச்சியில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து குறிப்பாக பொருளாளராக இருந்து சேவையாற்றியுள்ளார்.

பிறந்த ஊரான கொல்லங்கலட்டி வீரகத்திப்பிள்ளையாருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் ஆன தொண்டாற்றி இருக்கிறார். புகுந்த இடமான வருசப்புலத்து மகாமாரி அம்மனை தினமும் வழிபடுபவர். பரிபாலன நிருவாக சபையிலும் இருக்கிறார். குறிப்பாக பாரிய தேரமைப்புச்சபையின் தலைவராக இருந்து சிறப்பாற்றியதை யாரும் மறக்க மாட்டார்கள். என்ன இடையூறுகள் வந்தபோதும் தேர்த்திருப்பணி தொடரவேண்டும் தேரை வீதியிலே இழுக்கவேண்டும் என்று பாடுபட்ட பெருமகனை யாரும் மறக்கமுடியாது.

வரியப்புலம் வாசிகசாலையை திறம்பட நிர்வகித்து பொருளாளராக கடமையாற்றிய மனோகரன் அண்ணா இல்லையே என்று இளைஞர்கள் தவிக்கிறார்கள்.

நல்லவர்கள், வல்லவர்கள் வாழ்வது கடவுளுக்கு பொறுக்கவில்லையோ இந்தப்பருவத்தினை தன்னுடன் அணைத்துக்கொள்ள வேண்டும்.

இறைவா உன்நியதி இதுவா

ஓம் சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எத்தனை எத்தனை ஆண்டுகள் அத்தான் ........

மணவாழ்க்கையிலிருந்து ஒருயிரும் ஈருடலுமாக
வாழ்ந்தோமே அத்தான்
ஏன் அத்தான் இன்று இவ்வாறு பெரும்
பயணம் தொடர்ந்தீர்கள்
உங்கள் அன்பு மழலைகளையும் என்னையும்
தவிக்க வைக்க காலனவன் நினைத்தானோ
எமக்காக அன்றிலிருந்து இன்றுவரை நீங்கள்
அன்பாக செய்தவை எத்தனை எத்தனை
உங்கள் பிரிவைக் கூட அறியாத மழலை
உள்ளங்களை விட்டு எப்படி பிரிந்து சென்றீர்கள்
மணநாள் தொட்டு இன்றுவரை இருந்த உங்கள்
சாந்த முகத்தை என்று நாம் இனி பார்ப்போம்
உங்கள் சாந்த குணத்தை அறிந்தோ உங்களை
செல்லமாக சாந்தன் என்றழைத்தனர்
எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எமக்கு நீங்கள் என்றும் கடவுளே ஐயா.

**மனைவி, பிள்ளைகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா தான் எமக்குத்துணை என்றிருக்க இன்று அண்ணா என்றழைக்க .................?

உயிரென்றும் அதன் உறவென்றும்
உதரம் ஒன்றதனின் உதித்த ஐவர் நாம்
குடும்பத்தின் குலவிளக்காய்
தாய்க்குத் தலைமகனாய்
எம்மூவர்க்கும் அண்ணனாக
துள்ளித் திரிந்தோம்
பள்ளிப் பருவமதில்
ஏட்டுடன் உங்களுடன் பள்ளி சென்று
சிறகடித்த காலமது சிந்தை முன் நிற்கிறதே !
அன்பிற்கு உறைவிடமாய்
ஆசைக்கு அண்ணனாய்
இன்முகத்துடன் எமை நோக்கும்
ஈகையாளன் தான் நீங்கள் !
துயரம் என்று வந்து விட்டால்
அழுகிடுவோம் அண்ணாவே ! - இன்று
எம் துயரை துடைக்க யாருளரோ?
பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் இலக்கணமாய்
ஊர் போற்றும் உத்தமனே !
சிகிச்சை பெற பாரதம் சென்ற நீங்கள்
சீக்கிரமாய் வெறுத்தீரே நிலையற்ற வாழ்விதனை
குணமாகி வருவாரென்று குதூகலித்து நாமிருக்க
கொடிய காலனவன் கவர்ந்து சென்றானோ !
அண்ணா தான் எமக்குத் துணை என்றிருக்க
இன்று அண்ணா என்றழைக்க .................... ?

*சகோதரர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதையும் தாங்கும் இதயம் நமக்கேது

தொழுத கை மறந்தனையோ
மன்றாடும் அம்மாள் மனம் இரங்கவில்லையோ
உங்கள் உயிரைப்பறித்த காலனவன்
எங்களைக் கலங்க வைத்தானோ
எங்கள் நெஞ்சில் இடம்கொண்டு
அன்பு காட்டிய அருள்நிதியே
எங்களையெல்லாம் மீளாத்துயரில்
பரிதவிக்க வைத்து எங்கு சென்றீர்கள்
ஏன் மாமா இவ்வாறு பெரும் பயணம்
மீளாமல் தொடர்ந்தீர்கள்

**மருமக்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுதல் கூறிட யார் வருவார்

எங்கள் சகோதரியை வாழவைக்க வந்த முதல்வனே
எங்கள் எல்லோரையும் வாழவைத்தீரே
எங்கள் பிள்ளைகளிடம் வைத்த பாசமோ எண்ணிலடங்காதே
எங்கள் பிள்ளைகள் மாமா மாமா என கதறுகிறார்களே
உங்கள் போன்ற மாமாவாய் யாரைக்காட்டுவது
எங்களுக்கு அத்தானாய் மட்டுமின்றி அன்புத்தந்தையாய் இருந்தீர்களே
எங்களையெல்லாம் தனியே தவிக்கவிட்டு எங்கு நீங்கள் சென்றீர்கள் அத்தான்
எங்கள் வாழ் நாளில் ஓடும் கண்ணீர் வற்றிடினும் உங்கள் எண்ண நினைவு வற்றாது அத்தான்
எமக்கு ஆறுதல் யார் கூறிடுவார்கள்.

சாந்தி சாந்தி சாந்தி

அன்பு

**மச்சான்மார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ நற்பணியைப் பேணிய மகானுக்கு பிரார்த்தனை உரை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் எல்லோரும் இயற்கையில் நியதிப்படி ஒருநாள் இறப்பர். இது உலகில் நாம் கண்ட உண்மை. இவ்வகையில் வருவெட்டுவத்தில் வாழ்ந்த அமரர் பொன்னுத்துரை மனமோகன் அவர்கள், சைவ நற்பணியை பேணியது மட்டுமல்லாது அவர் கிராமத்திலேயே இருந்து மகாமாரி அம்மன் ஆலயத்திலேயும் தொண்டுகள் ஆற்றி ஆலய கட்டிட வளர்ச்சியிலும் அம்பாளின் குடமுழுக்கு வைபவத்திலும் அயராது உழைத்து மகிழ்ந்தார். அதோடு இல்லாமல் அம்பாளிற்கு மாதம் தோறும் அபிஷேகம் பூஜைகள் என்பவற்றைத்தன் உபயமாக ஏற்று சிறப்பாகவும் பெருமையாகவும் செய்ததோடு தான் மட்டுமின்றி தனது குடும்பத்தையும் ஆலய தொண்டிலும் பூசைகளிலும் பங்குபற்றச்செய்து சைவாலய வளர்ச்சியில் பெருமை கொண்ட மகான்.

பிறந்தவர் இறைவனடி அடைவது விதி. இதனை நோக்க வேண்டியது அறிவுடையார் பெருமையாகும்.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் பிறவார் உறுவது பெரும் பேரின்பம்

என்பதை நாம் உணர்ந்து ஆறுதல் அடைவோமாக. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமைகிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மகாமாரி அம்மன் குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லுள்ளம் படைத்தவர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க வாழ்ந்தவர் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் சமூகப் பணிகளை திறம்பட நடாத்தி வெற்றியும் கண்டவர்.

தனது பிறப்பிடமல்லாத புகுந்த இடத்திலும் ஆலயம் பாடசாலை, சனசமூக நிலையம் போன்ற பல இடங்களிலும் சேவைகள் புரிந்தவர். பொது இடங்களிலும் தனது வீட்டுக்கருமங்கள் போல் விழாக்களை வழிநடாத்திச் செல்வார்.

பாடசாலையின் செயற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்படுபவர். எமது பாடசாலை மைதானம் இல்லாத நிலையில் வேறோர் இடத்தில் விளையாட்டுப்போட்டியை இரண்டு வருடங்கள் நடாத்தியபோதும் எம்முடன் இணைந்து செயற்பட்டவர். அத்துடன் தரம் 1, 2 வகுப்பறைகள் புனரமைப்புக்காக நிதியினை தந்துதவியதன் மூலம் பாடசாலையில் பல வேலைத்திட்டங்களை செய்ய முடிந்தது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்**
திருஞான சம்பந்த வித்தியாசாலை,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர் பண்புடைய பண்பாளன்.

நல்லதொரு ஆத்மா, இன்று பரமாத்மா ஆகியுள்ளது. ஆம் அமரர் பொன்னுத்துரை மனமோகன் இறையடி சேர்ந்துவிட்டார். 1993களில் எம்மோடு இணைந்த அமரர் பொன்னுத்துரை மனமோகன் பழகுவதற்கு ஓர் இனிய நண்பனாக சிறந்த பண்பாளனாக செயல்வீரனாக திகழ்ந்தார். என்றும் புன்னகை மாறாத முகமும் சாந்தமான குணமும் இவருக்கே உரிய சிறப்பம்சங்கள் ஆகும். அங்கத்தவராக இணைந்த இவர் தனது சீரிய பண்புகளால் பொருளாளராய் பொறுப்பேற்று எமது நிலையத்தினை திறம்பட வழிநடாத்திச் சென்றார். இவருடைய காலத்தில் எமது நிலையம் பல வளர்ச்சிகளைக் கண்டது. அமைதியான வார்த்தைகளால் அளவளாவும் அமரர் பொன்னுத்துரை மனமோகன் உடன் பழகியவர்கள் அவரை எப்போதும் மறக்கமாட்டார்கள். என் செய்வோம்? ஏது செய்வோம்? எம் இனிய நண்பனை எப்போ காண்போம்? காலத்தின் நியதியா இது ! யார்தான் என்ன செய்ய முடியும்?. ஒரு பொல்லாப்பும் இல்லை, எல்லாம் எப்போதோ முடிந்த காரியம் என்ற யோகர் சுவாமிகளின் திருவாக்கினை நினைவில் நிறுத்தி பாசமிக்க தந்தையினை இழந்து தவிக்கும் பிள்ளைகளுக்கும், நல்லதொரு கணவனை இழந்து துயருறும் அவரது பாரியாருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் ஆறுதல்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வரியப்புலம் மகாமாரி அம்பாளை பிரார்த்தித்து அமைகிறோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் உமது பிரிவால் துயருறும்

**சுன்னாகம் வடக்கு சனசமூக நிலையத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான தம்பி

தம்பி உங்கள் குழந்தைப்பருவ சிரிப்பு மலர்ந்த முகம் இன்று எண்ணிப்பார்க்கும் போது என் இதயத்தில் திரைபோல் ஓடுகிறது. நீங்களும் நானும் உங்கள் சகோதரர்களும் மகாஜனக் கல்லூரிக்கு நடந்து சென்றநினைவு என்னைவிட்டகலவில்லை.

கொல்லங்கலட்டி பிள்ளையார் கோயிலுக்கு வெள்ளிக்கிழமையிலும் விசேட காலங்களிலும் வந்து வழிபடுவதும் அங்கு தொண்டு செய்வதும் மறக்கமுடியாதவை.

நீங்கள் கலாநிதியை மணம்செய்து மங்களநாண்பூட்டி ரதியும் மன்மதனும் போல் வாழ்ந்தீர்களே. விதியை யாரால் வெல்லமுடியும். அன்பும் அறிவும் செறிந்த உள்ளங்கள் பல ஒன்றாக வாழும்போது கண்ணூறுபட்டது போலாயிற்றே. நீங்கள் புகுந்த ஊரவர்களினதும் உறவினர்களினதும் உள்ளத்தில் குடிகொண்டு விட்டீர்கள் எல்லோரும் துடித்து வேதனைப்பட்டனர்.

அம்மா, அப்பா, மனைவி பிள்ளைகள், அக்கா, தம்பிமார், மைத்துனர்கள், மைத்துனிமார், மாமா, பெறாமக்கள் ஏங்கித்தவிக்க புலம்பி அழ நண்பர்கள் கண்ணீர் சிந்த காலன் உங்களைக்கவர்ந்துவிட்டான். விதியை யாரால் வெல்லமுடியும். உங்கள் பிரிவு எல்லோரையும் வாட்டுகிறது.


உங்கள் பிரிவால் துயருறும் அன்பான உள்ளங்களிற்கு எப்படி என்னால் ஆறுதல் கூறமுடியும். எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மாள் உடனுறை ஸ்ரீ மத்சிதம்பரேஸ்வரப்பெருமானை அபரிமிதமாகப் பிரார்த்திக்கின்றேன்.

**ஸ்ரீல ஸ்ரீ சிவஷண்முகானந்தக்குருக்கள்**
அறங்காவலரும் பிரதமகுரு
பிள்ளையார் கோவில் சிவன்கோவில்
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லங்கா சீமெந்து நிறுவனத்தின்
## கண்ணீர்க்காணிக்கை

இறைவனடி சேர்ந்த அமரர் பொன்னுத்துரை மனமோகன் இற்றைக்கு 22 வருடங்களுக்கு முன்பு தனது சேவையை லங்கா சீமெந்து நிறுவனத்துடன் இணைத்துக்கொண்டார். அவர் கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற அண்ணாவின் தாரகை மந்திரத்திற்குக் கட்டுப்பட்டு, செய்யும் தொழிலே தெய்வம் என்று வாழ்ந்து மற்றவர்கட்கு ஒரு வழிகாட்டியாக வாழ்ந்தவர்.

அவர் இதுவரை எந்த ஒரு சக தொழிலாளியினுடனோ தனது மேல் அதிகாரிகளுடனோ முரண்பட்டதில்லை. மறைந்த மனோவின் கருத்துக்கள் மற்ற தொழிலாளர்களின் கருத்துக்களால் வேறுபட்டிருக்கலாம். ஆனால் அவ் வேறுபாடுகளை அவர் ஒரு போதும் மன வேறுபாடாகக் கருதவில்லை என்பதை நாம் அனுபவரீதியாகக் கண்டறிந்திருந்தோம். அவர் மற்றவர்களுக்கு ஓர் உதாரண புருஷனாக வாழ்ந்து வழிகாட்டினார் என்பதை திடமாக எம்மால் கூறமுடியும்.

அவர் சிவபதம் அடைந்ததை எங்களால் ஜீரணிக்க முடியாவிட்டாலும் இவ்வுலகில் பிறந்தவர்கள் ஒரு நாள் மரணிக்கத்தான் வேண்டும் என்ற நியதியில் நாங்கள் எல்லோரும் அமைதியடைய வேண்டும். அவரின் மறைவால் துயருறும் அவரின் மனைவி, மக்கள், சகோதரருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர்கள்**

**ஊழியர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை சேவைக்கோர் அண்ணல்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

மனிதநேயம் நிறைந்திருப்பவர்களிடம் நற்பண்புகள் மிளிரும். அவர்களிடம் இறைபக்தி, நற்சிந்தனை, ஜீவகாருண்யம், சமூகசேவை, விடாமுயற்சி என்பன உருப்பெறும். அந்த வரிசையில் அமரத்துவமடைந்த திரு.பொன்னுத்துரை மனமோகன் முதன்மை வகித்தார்.

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகக் கொண்டாலும் திருமணம் காரணமாக 1990ஆம் ஆண்டு வரியப்புலத்தை புகுந்த இடமாக்கிகொண்டார். அதன்பின்பு வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அரும்பாடுபட்டவர். ஊர் மக்கள் விருப்பப்படி அம்பாளுக்கு தேர் ஒன்று செய்து வீதியில் இழுக்க வேண்டும் என்ற எண்ணத்தை குறுகிய காலத்தில் முடித்த பெருமை அவருக்குண்டு.

தேர் திருப்பணிச்சபையை அமைத்தபோது அதன் தலைவராக இருந்து தன்பணியை திறம்பட செய்து முடித்தார். அத்தோடு ஸ்ரீ மகாமாரி அம்பாளின் பரிபாலன சபையிலும் அங்கத்தவராக இருந்து பணிபுரிந்தார்.

அளவோடு வார்த்தைகளை உதிர்ப்பவர். சினம் என்ற வார்த்தைக்கு பொருளேதும் அறியாத பண்புள்ளம் கொண்டவர். தெய்வசிந்தனையோடு பணிபுரிந்தார். இப்படிப்பட்டவருக்கு இப்படியொரு முடிவு வரக்காரணம் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைப்போதமே காணா தேகம் கண்டாய்
வினைதான் நீங்கில் தினைப்போதும் நில்லாது உயிர்

என்றபடி அவர் ஆத்மா அரனடி சேர்ந்தது
பூதஉடம்பு போனாலும் புகழுடம்பு நிலைத்து நிற்கும்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ மகாமாரி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**செ.சிவயோகம்**
உபதலைவர்
வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி
அம்பாள் தேவஸ்தானம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி
# நவில்கின்றோம்.

எங்கள் அன்புத்தெய்வம் நோயுற்றிருந்த போது உதவிகள் புரிந்தோருக்கும், அவரது இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியும் அனுதாபச்செய்திகள் அனுப்பியும் எமது துயரத்தில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும், அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்குபற்றி, மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வரியப்புலம்
சுன்னாகம்

**மனைவி**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

பொன்னுத்துரை
\+
சரஸ்வதி

- மல்லிகாதேவி + இராசரத்தினம்
  - தயாபரன்
  - தயாளினி
  - சிவாஜினி
- **மனமோகன்**
- மனோகரன் + ரதி
  - சேயன்
  - கிரீசன்
  - துஷாந்தி
- மகாதேவன் + ஜெயமாலா
  - துவாரகன்
  - நர்த்தனன்
  - நந்தகரன்
- மகே + சுகு

**மனமோ**
\+
கலா

- சாளி
- ஜயபிர
- பிரிய
- சுகாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

நடராசா
+
சின்னம்மா
(காலஞ்சென்றவர்)

மகேந்திரன்
+
சுகுணாதேவி

தவேந்திரன்
+
ருடவதி

லெக்ஷன்
அஜோஜன்
நிதுசனா

கலாநிதி

அருள்ராஜா
+
சுகந்தி

கஜப்பிரியன்
வட்சலாஜினி
நிஷாந்தன்

**மோகன்**
+
கலாநிதி

ணியா (காலஞ்சென்றவர்)
பிவர்ஷனி
ரியங்கன்
காங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்பாடு

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 1 x1 =1 | 1 x2 =2 | 1 x3 =3 | 1 x4 =4 | 1 x5 =5 | 1x6 = 6 |
| 2 x1 =2 | 2 x2 =4 | 2 x3 =6 | 2 x4 =8 | 2 x5 =10 | 2x6 = 12 |
| 3 x1 =3 | 3 x2 =6 | 3 x3 =9 | 3 x4 =12 | 3 x5 =15 | 3x6 = 18 |
| 4 x1 =4 | 4 x2 =8 | 4 x3 =12 | 4 x4 =16 | 4 x5 =20 | 4x6 = 24 |
| 5 x1 =5 | 5 x2 =10 | 5 x3 =15 | 5 x4 =20 | 5 x5 =25 | 5x6 = 30 |
| 6 x1 =6 | 6 x2 =12 | 6 x3 =18 | 6 x4 =24 | 6 x5 =30 | 6 x6 = 36 |
| 7 x1 =7 | 7 x2 =14 | 7 x3 =21 | 7 x4 =28 | 7 x5 =35 | 7 x6 = 42 |
| 8 x1 =8 | 8 x2 =16 | 8 x3 =24 | 8 x4 =32 | 8 x5 =40 | 8 x6 = 48 |
| 9 x1 =9 | 9 x2 =18 | 9 x3 =27 | 9 x4 =36 | 9 x5 =45 | 9 x6 = 54 |
| 10x1=10 | 10x2 =20 | 10x3 =30 | 10x4 =40 | 10x5 =50 | 10x6 = 60 |
| 11x1 =11 | 11x2 =22 | 11x3 =33 | 11x4 =44 | 11x5 =55 | 11x6 = 66 |
| 12x1=12 | 12x2 =24 | 12x3 =36 | 12x4 =48 | 12x5 =60 | 12x6 = 72 |
| 13x1=13 | 13x2 =26 | 13x3 =39 | 13x4 =52 | 13x5 =65 | 13x6 = 78 |
| 14x1=14 | 14x2 =28 | 14x3 =42 | 14x4 =56 | 14x5 =70 | 14x6 = 84 |
| 15x1=15 | 15x2 =30 | 15x3 =45 | 15x4 =60 | 15x5 =75 | 15x6 = 90 |

| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|
| 1 x7 =7 | 1 x8 =8 | 1 x9 =9 | 1 x10=10 | 1 x11=11 | 1 x12= 12 |
| 2 x7 =14 | 2 x8= 16 | 2 x9 =18 | 2 x10=20 | 2 x11=22 | 2 x12= 24 |
| 3 x7 =21 | 3 x8= 24 | 3 x9 =27 | 3 x10=30 | 3 x11=33 | 3 x12= 36 |
| 4 x7 =28 | 4 x8 =32 | 4 x9 =36 | 4 x10=40 | 4 x11=44 | 4 x12= 48 |
| 5 x7 =35 | 5 x8 =40 | 5 x9 =45 | 5 x10=50 | 5 x11=55 | 5 x12= 60 |
| 6 x7 =42 | 6 x8 =48 | 6 x9 =54 | 6 x10=60 | 6 x11=66 | 6 x12=72 |
| 7 x7 =49 | 7 x8 =14 | 7 x9 =63 | 7 x10=70 | 7 x11=77 | 7 x12=84 |
| 8 x7 =56 | 8 x8 =64 | 8 x9 =72 | 8 x10=80 | 8 x11=88 | 8 x12=96 |
| 9 x7 =63 | 9 x8 =72 | 9 x9 =81 | 9 x10=90 | 9 x11=99 | 9 x12=108 |
| 10x7=70 | 10x8 =80 | 10x9 =90 | 10x10 =100 | 10x11 =110 | 10x12=120 |
| 11x7=77 | 11x8 =88 | 11x9 =99 | 11x10=110 | 11x11 =121 | 11x12=132 |
| 12x7=84 | 12x8 =96 | 12x9 =108 | 12x10 =120 | 12x11 = 132 | 12x12=144 |
| 13x7=91 | 13x8 =104 | 13x9 =117 | 13x10 =130 | 13x11 = 143 | 13x12=156 |
| 14x7=98 | 14x8 =112 | 14x9 =126 | 14x10= 140 | 14x11= 154 | 14x12=168 |
| 15x7=105 | 15x8 =120 | 15x9 =135 | 15x10=150 | 15x11= 165 | 15x12=180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்கவிருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கின்றாய் அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே
எடுக்கப்பட்டது. எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே
கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதி.

~ பகவத் கீதை ~

நிசு ஓவ்செற் பிறின்டேஸ் - சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org